*செய்தி வெளியீடு எண் : 12* *நாள் : 07.09.2019*

**தேனி மாவட்டம்,**
**குடிமராமத்து திட்டத்தின் கீழ்**
**கண்மாய்களை சீரமைக்கும் பணிகளை**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்**
**பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்:-**

*தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், ஏத்தக்கோயில் கிராமத்திற்குட்பட்ட ஏத்தக்கோயில் கண்மாய் பொதுப்பணித்துறை (நீர்வள ஆதார அமைப்பு) சார்பில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் ரூ.18.90 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கும் பணி மற்றும் ஊரக வளர்ச்சித்துறை சார்பில் தலா ஒரு இலட்சம் மதிப்பீட்டில் மாயமூப்பர் ஊரணி, வண்ணாங்குளம், திருமேனி வாய்க்கால் ஆகிய கண்மாய்கள் சீரமைக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (07.09.2019) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.*

***ஆய்வுக்குப்பின் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,***

*தமிழக அரசு தமிழகத்தில் வறட்சியை எதிர்கொள்ளவும், நீர்வள ஆதாரங்களை மேலாண்மை செய்திடவும் விவசாயிகளின் பங்களிப்புடன் நீர் நிலைகளை புனரமைக்கும் பண்டைய குடிமராமத்து திட்டத்தினை செயல்படுத்திட உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள குளங்களில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் வரத்து வாய்க்கால் மற்றும் கால்வாய்கள், ஏரிகள், மதகுகள் மற்றும் பிற நீர்நிலைகள் ஆகியவற்றை புனரமைத்தல், பலப்படுத்துதல் மற்றும் கலிங்குகள், மதகுகளை மறுகட்டுமானம் செய்தல், நீர்வழிகளில் அடைத்திருக்கும் செடிகளை அகற்றுதல் போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*குடிமராமத்து திட்டத்தின் கீழ் ஆண்டிபட்டி வட்டம், ஏத்தக்கோயில் கிராமத்திற்குட்பட்ட ஏத்தக்கோயில் கண்மாய் பொதுப்பணித்துறை (நீர்வள ஆதார அமைப்பு) சார்பில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் ரூ.18.90 இலட்சம் மதிப்பீட்டில் 800 மீட்டர் கரை, ஒரு கலிங்கு, இரண்டு மடை சீரமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகிறது இதன் மூலம் 45.69 ஏக்கர் நிலம் பாசனவசதி பெறும் மேலும் இக்கண்மாயை சுற்றியுள்ள ஏத்தக்கோயில், சித்தையகவுண்டன்பட்டி ஆகிய கிராமங்களில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து குடிநீர் தேவை மற்றும் கால்நடைகளுக்கு தேவையான தண்ணீர் தங்குதடையின்றி கிடைக்கும் என தெரிவித்தார்.*

*மேலும் ஊரக வளர்ச்சித்துறை சார்பில் தலா ஒரு இலட்சம் மதிப்பீட்டில் மாயமூப்பர் ஊரணி, வண்ணாங்குளம், திருமேனி வாய்க்கால் ஆகிய குளங்கள் சீரமைக்கும் பணிகளை ஆய்வு மேற்கொண்டார்.*

*ஆய்வின்போது, பொதுப்பணித்துறை (நீர்வள ஆதாரஅமைப்பு) செயற்பொறியாளர் சுந்தரப்பன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பா.திலகவதி, உதவி இயக்குநர்(ஊராட்சிகள்)முருகன், செயற்பொறியாளர் எஸ்.கவிதா, உதவி செயற்பொறியாளர் கார்த்திகேயன், உதவிப்பொறியாளர் கணேசன், வட்டாட்சியர் சந்திரசேகரன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரெங்கராஜ், ஆண்டாள் மற்றும் விவசாயிகள் உட்பட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.*

***வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.***